கிளாம்பாக்கத்தில் ரூ. 400 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழியெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், டிச.30-

வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு ஆலந்தூர் முதல் வண்டலூர் வரை வழியெங்கும் கழகத்தினர் திரண்டு நின்று எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடி செலவில் மிக பிரம்மாண்டமான முறையில் புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது. 89 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இம்மாபெரும் பேருந்து நிலைய திறப்பு விழா இன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இப்பேருந்து முனையத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அற்பணித்து திறந்து வைக்கிறார்.

வண்டலூர் கிளாம்பாக்கத்தில் இன்று காலை நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வழியெங்கும் சாலை இருபுறமும் கழகத்தினரும் பொதுமக்களும் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் கழகத்தினர் அணிவகுத்து நின்று கழக கொடிபதாகைகளை ஏந்தி எழுச்சியுடன் வரவேற்க உள்ளனர்.

இப்பேருந்து முனைய திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30.12.2023 சனிக்கிழமை) காலை 8.00 மணியளவில் சென்னையில் இருந்து புறப்படுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முன்பு ஆசர்கானா சந்திப்பு அருகில் இன்று காலை 8.00 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் என்னுடைய (தா. மோ.அன்பரசன்) தலைமையில், ஆலந்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கி உள்ள கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு நின்று, செண்டை மேளதாளம் பாண்டு வாத்தியம் அதிர் வேட்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் பம்மல் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள் த.ஜெயக்குமார் வே.கருணாநிதி ஆகியோர் தலைமையில் பேண்டு வாத்தியம் முழங்க பம்மல் வடக்கு தெற்கு பகுதி கழகத்தினர் பெருந்திரளாக அணிதிரண்டு நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்க உள்ளனர்.

குரோம்பேட்டை இரயில் நிலையம் எதிரில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ. தலைமையில் பேண்டு வாத்தியம் முழங்க பல்லாவரம் வடக்கு தெற்கு பகுதி கழகத்தினர் பெருங்கூட்டமாக் கூடி நின்று உற்சாகமாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

சானட்டோரியம் மெப்ஸ் அருகில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் மேளதாளம் முழங்க செம்பாக்கம் வடக்கு தெற்கு பகுதி தாம்பரம் கிழக்கு பகுதி பெருங்களத்தூர் தெற்கு பகுதியில் அடங்கிய கழகத்தினர் பெருந்திரளாக அணிவகுத்து நின்று மிகவும் எழுச்சியான வரவேற்பு அளிக்க உள்ளனர்.


தாம்பரம் இரயில் நிலையம் அருகில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ. தலைமையில் பேண்டு வாத்தியம் முழங்க தாம்பரம் மேற்கு பகுதி பெருங்களத்தூர் வடக்கு பகுதியில் அடங்கிய கழகத்தினர் அனைவரும் பெருங்கூட்டமாக கூடி நின்று உற்சாகமாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

அடுத்து வண்டலூர்-கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலைய முகப்பு அருகே மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ. தலைமையில் பேண்டு வாத்தியம் மேளதாளம் முழங்க செங்கல்பட்டு மற்றும் திருப்போரூர் தொகுதியில் அடங்கிய கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்க உள்ளனர்.

ஆலந்தூர் முதல் வண்டலூர் கிளாம்பாக்கம் வரை வழி நெடுகிலும் சாலையின் இருபுறமும் கழக கொடி தோரணங்கள் மிகவும் அழகுடன் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அவர்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள வரவேற்பு தரும் இடங்களில் கழகத்தின் இரு வண்ண கொடிகளை ஏந்தி ஆயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்கும்படி அன்புடன் அழைக்கிறேன்.

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது நமது கடமை உரிமை என்ற உணர்வோடு வழியெங்கும் அளிக்கப்படும் வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் உள்ள கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.12.2023) கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள்–2023 போட்டி நடைபெறவுள்ள சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் பங்கேற்றனர்.

## அனைத்து மாவட்டங்களிலும்

# ஆட்சி மொழிச் சட்ட வாரம் - விழிப்புணர்வு!

## பல்வேறு அறிஞர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்!

சென்னை, டிச.30-

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956-ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒருவார காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆட்சிமொழிச் சட்ட வாரம் சென்னை மாவட்டத்தில் 18.12.2023 முதல் 27.12.2023 கொண்டாடப்பட்டது. 18.12.2023 முதல் 22.12.2023 வரை கலைபண்பாட்டு இயக்கக கூட்ட அரங்கத்தில் பயிற்சி வகுப்புகள் முற்பகல் 10 மணி முதல் 12.30 வரை நடைபெற்றது.

முதல் நாள் 18.12.2023 அன்று "ஆட்சி மொழிச் சட்ட வரலாறு" தலைப்பில் மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி அ. முகமது ஜியாவுதீன் பயிற்சி அளித்தார்.

இரண்டாம் நாள் 19.12.2023 அன்று "காலந்தோறும் தமிழில் ஆட்சிச் சொற்கள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு தலைப்பில் பயிற்சி அளித்தார்.

மூன்றாம் நாள் 20.12.2023 அன்று "மொழிப் பயிற்சி" என்னும் தலைப்பில் முனைவர் அண்ணாகண்ணன் பயிற்சி அளித்தார்.

நான்காம் நாள் 21.12.2023 அன்று "மொழி பெயர்ப்பு" என்னும் தலைப்பில் திருமதி த. இளவேனில் முல்லை பயிற்சி அளித்தார்.

ஐந்தாம் நாள் 22.12.2023 அன்று "கணினித் தமிழ்" என்னும் தலைப்பில் முனைவர் க. சண்முகம் பயிற்சி அளித்தார்.

ஆறாம் நாள் 26.12.2023 அன்று ஆட்சிமொழிச் சட்ட வாரத்தில் ஒரு நிகழ்வான வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வலியுறுத்தல், கடைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், உணவகங்கள் முதலியவற்றில் பெயர்ப்பலகைகளைச் சரியாகத் தமிழ்ச் சொற்களில் எழுதி வைக்கும் பொருட்டு "வணிகர் சங்கங்களின் கூட்டம்" 26.12.2023 அன்று மாலை 4.35 மணி முதல் 6.00 மணிவரை நடைபெற்றது.

ஏழாம் நாள் 27.12.2023 அன்று ஆட்சிமொழிச் சட்ட வார விழிப்புணர்வுப் பேரணியை சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தொடங்கி வைத்தார். இப்பேரணியில் கல்லூரி முதல்வர், பேராசிரியர் பெருமக்கள் மற்றும் மாநிலக் கல்லூரியில் பயிலும் 300 மாணவர்கள் கலந்து கொண்டு ஆட்சிமொழிச் சட்டவார விளம்பரப் பதாகைகள் ஏந்தி "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற வாசகங்களை முழக்கமிட்டு விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்றனர்.

